திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவரவர்களே, எப்பொழுது கட்டப்படும் என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, நில எடுப்பு சட்டத்தின் படி 27–1–1981 அன்று 4.17 ஏக்கர் நிலமும், 11–3–1981 அன்று 0.31 ஏக்கர் நிலமும் கையகப் படுத்தப்பட்டுள்ளன. அதற்காக வருவாய்த் துறைக்குப் பணமும் செலுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே விரைவில் கட்டுமானப் பணி மேற்கொள்ளப்படலாம்.

சின்னதாராபுரத்தில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் அமைக்கும் திட்டம்.

*வினா எண். 775—திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சின்னதாராபுரத்தில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) ஆம்.

(ஆ) 30–3–1981 ல் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் துவங்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 776 முதல் 779 வரை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்பெறுகின்றன.

அரசு மருத்துவ மனைகளிலுள்ள நுட்பமான கருவிகள்.

*வினா எண். 780—திரு. பாபு ஜனார்த்தனன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) அரசு மருத்துவ மனைகளில் நுட்பமான கருவிகளை செப்பனிடத் தெரிந்தவர்கள் இல்லையென்பதால் ஏராளமாக செலவிட்டுத் தருவிக்கப்பட்ட பல கருவிகள் செயல்படாமல் இருப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அவை எப்பொழு செப்பனிடப்படும்,

(இ) வெளிநாட்டு நிபுணர்களைக் கொண்டு செப்பனிடப் படும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) உதிரி பாகங்கள் உடனடியாகக் கிடைக்காத காரணத்தால் சில நுட்பமான கருவிகள் செயல் படுத்த முடியாமல் உள்ளன.

(ஆ) மருத்துவ மனைகளைப் பொறுத்தவரை தேவைக் கேற்றவாறு செப்பனிட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

(இ) இல்லை.

திரு. கா. கோபாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த நுட்பமான கருவிகளை இயக்குபவர்கள் அந்தந்த ஆஸ்பத்திரிகளில், பெரிய மருத்துவர்களின் கண்ட்ரோ லில் இல்லாமல் இருப்பதால் அந்த நுட்பமான கருவிகள் வேலை செய்வது தடைபடுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே மூலக் கேள்விக்குப் பதில் சொல்கிற நேரத்திலே, 'உடனடியாக கிடைக்காத காரணத்தால்' என்று சொல்லியிருக்கிறேன். ஆகவே, சில நேரங்களில் தாமதமாகும். ஸ்பேர் பார்ட்ஸ் என்று சொல்லக்கூடிய உதிரி பாகங்கள் கிடைத்தஉடனே பழுதுபார்க்கப்படும்.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாதிரியான நுட்பமான கருவிகள் பல மருத்துவ மனை களிலே அதுவும் குறிப்பாக தலைமை மருத்துவ மனைகளிலே கூட விநியோகிக்கப் பட்டு, அதை இயக்குவதற்கு ஆள் இல்லாம மலோ அல்லது ரிப்பேர் ஆனால், சரி செய்ய முடியாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா? அதோடு கோயில்பட்டியிலே இருக்கிற மருத்துவ மனையிலே இ.சி.ஜி. கருவி வாங்கி வைத்து, ஒரு வருடமாகிறது. அதை இயக்குவதற்கு ஆள் இல்லாமல் ரிப்பேர் ஆனால் சரி செய்ய ஆள் இல்லாமல் இருப்பதால், அது உபயோகத்தில்லாமலிருப்பது அரசுக்குத் தெரியுமா? உடனடி யாக, கோயில்பட்டி மருத்துவ மனையிலே உள்ள கருவியை ரிப்பேர் செய்யவும், இயக்குவதற்கும் ஆளை நியமிக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, கோயில்பட்டியிலே இருக்கிற இ.சி.ஜி. கருவி உபயோகத்தில் இல்லையென்று மாண்புமிகு உறுப்பினர் சொல் கிறார். அதற்கு நாம் என்ன செய்திருக்கிறோம் என்றால்

Electro Modicol Equipments Centre என்று மாவட்ட ரீதியாக தொழில் துறை மூலமாக அமைத்திருக்கிறோம். அந்தத் துறை மூலமாக உடனடியாகப் பழுது பார்க்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். கோயில்பட்டியைப் பொறுத்தவரை மாண்புமிகு உறுப்பினர் தெளிவாகத் தகவல் கொடுத்திருக்கிறார். இன்றே தொலை பேசி மூலமாகப் பேசி, அதை உடனடியாக ரிப்பேர் செய்ய ஏற்பாடு செய்யப்படும்.

திரு. இரா. கருப்பையா : தலைவர் அவர்களே, அரசு மருத்துவ மனைகளில் பொதுவாக இந்த நிலை நீடிக்கிறது. குளித்தலை மருத்துவ மனையில் எக்ஸ்-ரே யூனிட் ஆரம்பிக்கப் பட்டு ஓராண்டு ஆகிறது. கம்ப்ளிஷன் சர்ட்டிபிகேட் கொடுக்க வில்லையென்று தெரிகிறது. அதனால் அரசுக்கும் நஷ்டம், மக்களுக்கும் நஷ்டம். இம்மாதிரியான நிலையை மாற்றவும் இம்மாதிரியான செயல்களுக்குப் பொறுப்பானவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும் அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9-20]

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி வேறு, இந்தக் கேள்வி வேறு, கம்ப்ளிஷன் சர்ட்டிபிகேட் என்பது வேறு. அது எக்ஸ்ரே மிஷனைப் பொருத்தப்பட்ட பிறகு சட்டிடம் கம்ப்ளிஷன் ஆகாமல் இருக்கலாம். அல்லது ஒயரிங் வேலை கம்ப்ளிஷன் ஆகாமல் இருக்கலாம். கம்ப்ளிஷன் சர்ட்டிபிகேட்டிலே தாமதம் இருக்குமானால், அது குறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எஸ். ஆண்டித்தேவர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலக் கேள்விக்குப் பதில் சொல்லுகிறபோது அந்த நுட்பமான கருவிகளுக்கு ஸ்பேர் பார்ட்ஸ் இல்லாததனால்தான் சில நேரங்களில் தாமதப்படுகிறது என்று சொன்னார்கள். ஆனால் அந்தக் கருவிகளை ரிப்பேர் செய்யத் தெரிந்தவர்கள் இல்லாத காரணத்தினால்தான் தமிழகத்திலே பல மருத்துவமனை களிலே இவைகள் ரிப்பேர் செய்யப்படாமல் இருககின்றன. அப்படி ரிப்பேர் செய்வதற்கான ஆட்கள் போடாமல் இருக்கின்றதா? இப்படிப்பட்ட நுட்பமான கருவிகளை பல இடங்களில் வாங்கி, அவை ரிப்பேர் ஆன காரணத்தினால் 2 ஆண்டு 3 ஆண்டு என்று அவைகள் இயங்காமல் இருக்கின்ற காரணத்தினால், அபாயகரமான நோயாளிகளுக்கு வைத்தியம் செய்வதற்கும், ஆப்பரேஷன் தியேட்டர்களில் கூட அந்த மெஷின்கள் வேலை செய்யாமல் இருக்கிறதே இதை உடனடியாகக் தவிர்த்து அதற்கு வேண்டிய ஆட்களைப் போடவும் அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். இந்தத் துறைக்கு நான் பொறுப்பேற்றுக்கொண்ட உடனே ஒரு இடத்தில் கூட நான் பேசியிருக்கிறேன். அது பத்திரிகையிலேயும் வந்திருக்கின்றது. இப்படி நிறைய நுட்பமான கருவிகள் பழுது பார்க்கப்படாமல் பல இடங்களில் இருக்கின்ற காரணத்தினால், பல லட்சக் கணக்கான மதிப்புள்ள நல்ல முக்கியமான கருவிகள் பயன்படுத்தப்பட முடியாமல் இருக்கின்றன என்று சொல்லி அதற்காக உத்தரவைப் போட்டிருக்கிறோம். அந்தக் கருவிகளை நமக்குத் தருகின்ற நேரத்தில் அதனுடைய டெக்னிக்கல் நோ ஹௌ அதாவது அது வேலை செய்யக்கூடிய முறைகளை சொல்லிக் கொடுக்கவேண்டும் என்று சொல்லி இருக்கிறோம். அதுமட்டுமல்லாமல், எல்லா மாவட்ட மருத்துவ அதிகாரிகளுக்கும் டி. எம். இ. அவர்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பி, இப்படிப்பட்ட மெஷின்கள் எங்கெங்கு வேலை செய்யவில்லையோ அவைகளை ரிப்பேர் செய்து பயன்படுத்த வேண்டும் என்றும் உத்தரவிட்டு நடவடிக்கை எடுத்திருக்கிறோம்.

திரு ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டைமான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கருவிகளை செப்பனிடுவதற்குத் தெரிந்தவர்கள் இல்லை என்று சொல்லி இருக்கிறார்கள். அதைத் திறம்படச் செய்வதற்கு, அவர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கு, அந்த ஆட்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி அவர்கள் பயிற்சி பெறுவதற்கு இந்த அரசாங்கம் ஏற்பாடு செய்ய முன்வருமா என்பதை அறியவிரும்புகிறேன.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்காக வெளிநாடுகளுக்குச் செல்ல வேண்டிய அவசியம் இல்லை. இங்கேயே அதற்கு வாய்ப்பு இருக்கிறது. கிண்டியிலே கூட 2 என்ஜினிரிங் கல்லூரிகள் இருக்கின்றன. கிண்டி என்ஜினிரிங் கல்லூரி, ஐ.ஐ.டி. இருக்கின்றன. இந்த இரண்டு கல்லூரிகளின் உயர்மட்ட அதிகாரிகளைப் பார்த்து சொல்லி இருக்கிறோம். இப்படிப்பட்ட எக்விப்மென்டுகளை ரிப்பேர் செய்ய ஒரு பிரிவை ஏற்படுத்தினால் நல்லது என்று சொல்லி இருக்கிறோம். அவர்களும் இதற்கு ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த விஷயத்தைப் பொறுத்த வரையில் பல முறைகளிலே நடவடிக்கை எடுத்து இருக்கிறோம்.

கொடுமுடி அரசு மருத்துவமனைக் கட்டிடம்.

*வினா எண் 781—திரு. ச. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—